# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2015 / 2016 (ஒக்டோபர் - 2018)

**HYS : 4233 Economic History of Sri Lanka from 1800 - 2000**
**HYS : 4233 இலங்கை பொருளாதார வரலாறு 1800 - 2000**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி I

1. காலனித்துவ காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை மேல்வரும் தலைப்புக்களினூடாக ஆராய்க.

   அ) கோப்பிப் பயிர்ச்செய்கையின் ஆரம்பமும் வளர்ச்சிப் போக்கும் (10 புள்ளிகள்)

   ஆ) தேயிலைப் பயிர்ச்செய்கையும் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கமும் (10 புள்ளிகள்)

2. மேல்வரும் தலைப்புக்களை இறப்பர் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு புள்ளிவிபரங்களினூடாக விபரிக்குக.

   அ) இறப்பர் பயிர்ச்செய்கையின் அறிமுகமும் வளர்ச்சிப் போக்கும் (10 புள்ளிகள்)

   ஆ) இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் (10 புள்ளிகள்)

3. “சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் கைத்தொழிற் கொள்கை வகுப்பிலும் செயற்படுத்தலிலும் சமகால அரசாங்கங்களின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தாக்கம் செலுத்தி வந்துள்ளன.” இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ) 1960 - 1977 இடைப்பட்ட கைத்தொழிற் கொள்கையும் செயற்பாடுகளும் (10 புள்ளிகள்)

   ஆ) 1977 - 2000 இடைப்பட்ட காலக் கைத்தொழிலில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் (10 புள்ளிகள்)

## பகுதி II

4. காலனித்துவ கால இலங்கையில் கறுவா உற்பத்தியும் வர்த்தக நடவடிக்கையும் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்.)

5. "இலங்கையின் கிராமிய விவசாயக் கொள்கையானது உணவுப் பாதுகாப்பினையும் (Food Security) கிராமிய மக்களின் வருமானத்தையும் உயர்த்துவதையே நோக்காகக் கொண்டிருந்தது." இக்கூற்றின் அடிப்படையில் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் ஆராய்க. (20 புள்ளிகள்)

6. " மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வருகையும் அவர்கள் எதிர் நோக்கிய சவால்களும்" என்ற தலைப்பில் ஒரு வரலாற்றுக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

7. 1800 - 2000 இடைப்பட்ட காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்திய அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளைக் குறிப்பிட்டு அவை தொடர்பில் நுணுகி ஆராய்க. (20 புள்ளிகள்)